# பாடம் 30: அருளடையாளங்கள் (அறிமுகம்)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (8 வயது) | : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (11 வயது) | : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (14 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய இரண்டு பாடங்களில், கிறிஸ்தவர்களாக நாம் நம்புகிறவற்றை வெளிப்படுத்தும் இறைமக்களின் கூற்றுகளான நம்புகைகள் குறித்து நாம் கற்றோம். கிறிஸ்துவின் தூய திருச்சபையின் பகுதியாக இருக்கிறதால் நாம் இந்த நம்புகைகளை அறிக்கையிடுகிறோம். இந்த நம்பிக்கைகளின் காப்புறுதியாளராக இருக்கிறதோடு கூடுதலாக, சில மிக முக்கியச் செயல்களுக்கும், அதாவது அருளடையாளங்களுக்கும் காப்புறுதியாளராக இருக்கிறது. இந்த பாடத்திலும் வருகின்ற அடுத்த சில பாடங்களிலும், அருளடையாளங்கள் குறித்து நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. தூய கத்தோலிக்கத் திருச்சபையின் ஏழு அருளடையாளங்களாவன:
   திருமுழுக்கு
   உறுதிபூசுதல்
   நற்கருணை
   ஒப்புரவு
   நோயில்பூசுதல்
   திருநிலைகள்
   திருமணம்

2. ‘‘அருளடையாளம்’’ என்றச் சொல், ‘‘தூயதாக்கல்’’ என்று பொருள்படும் *சாக்ரமெந்தும்* என்ற லத்தீன் சொல்லில் இருந்து வருகிறது. அருளடையாளத்தைப் பெறுகிறவருக்கு கடவுள் தமது இறை வாழ்வைப் பகிர்ந்திட, காணப்படும் பொருளைப் பயன்படுத்துகிறார். கடவுள் மனிதரான பொழுது, அதாவது இயேசு கிறிஸ்து, பொருள் சார்ந்தவைப் புனிதம் பெற்றுள்ளன, மேலும் கடவுளின் அருளைப் பகிர்ந்தளிக்கும் கருவியாகத் தகுதி பெற்றுள்ளன.

3. அருளடையாளர்கள் கிறிஸ்துவாலேயே நிறுவப்பட்டவை. திரெந்து சங்கத்தின்படி (1545-63), கிறிஸ்து அவற்றை நிறுவவில்லை எனில், அவை அருளடையாளங்களாக இருக்க முடியாது. கிறிஸ்துவால் அவை நிறுவப்பட்டன என்பதற்கு கிறிஸ்து தமது சொந்த வாழ்வின் செயல் அல்லது பேச்சு வழியாக இவற்றைக் கையாண்டுள்ளார் என்பது பொருளாகும்.

4. இயேசு சிலுவையில் தாம் இறக்கும் முன்பு, ‘‘தெத்தேலெஸ்தய்’’ (இது நிறைவேறிற்று) என்று கூறியதாக யோவான் நற்செய்தி பதிவு செய்கிறது. இந்த சொல்லை நான்காம் நூற்றாண்டில் புனித எரோனிமுஸ் *கொன்சும்மாத்தும் எஸ்த்* (இது முழுமையுற்றது) என்று லத்தீனில் மொழிபெயர்த்தார். சிலுவையில் இயேசு திருச்சபையைத் தம் தூய மணவாட்டியாக ஏற்றார் என்பது இதன் பொருளாகும். சிலுவை, பலியின் இடமாக இருந்ததை விட, கிறிஸ்து மற்றும் அவரது மணவாட்டியின் மஞ்சமாக இருந்தது: ஒரே, தூய, கத்தோலிக்க, மற்றும் திருத்தூதரியத் திருச்சபை. ஹிப்போ புனித அகுஸ்தீன் (*செர்மோ சுப்போசீட்டிஸ்* 120): ‘‘ஒரு மணவாளரைப் போன்று கிறிஸ்து தமது அறையில் இருந்து புறப்பட்டுச் சென்றார்... அவர் திருமண மஞ்சமாகிய சிலுவைக்கு அவர் வந்தார், அங்கு அதில் பிணைக்கப்பட்டதில், அவர் தமது திருமணத்தை நிறைவுறச் செய்தார். அவர் படைப்புயிரின் பெருமூச்சை உய்தறிந்த பொழுது, தமது மணவாட்டியின் இடத்தில் அவர் அன்புடன் தம்மைத் துன்புறுத்தலுக்குக் கையளித்தார், மேலும் என்றென்றைக்கும் என தம்மை அவளோடு சேர்த்துக் கொண்டார்.’’

5. நாம் கிறிஸ்துவுடனான நமது ஒன்றிப்பை நேர்ப்பொருளில் புரிந்துகொள்வதால், திருச்சபை கிறிஸ்துவினது நெருங்கியப் பகுதி என்று நேர்ப்பொருளில் கத்தோலிக்கத் திருச்சபை புரிந்து கொள்கிறது. இதுவே திருச்சபை குறித்தப் புனித பவுலின் புரிதலுமாக இருந்தது (1கொரி 12:27: ‘‘தற்போது நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கின்றீர்கள், மேலும் நீங்கள் ஒவ்வொருவரும் அதன் உறுப்புகள்’’). கிறிஸ்துவோடு ஒருசேர இணைந்தத் திருச்சபையை

புனித அகுஸ்தீன் *தோத்துஸ் கிறிஸ்துஸ்* (“முழுமையான கிறிஸ்து”) என்று அழைக்கிறார். திருச்சபையும் கிறிஸ்துவும் (மணவாட்டியும் மணவாளரும்) ஒன்றாக இருக்கிறதால், அவளது பிள்ளைகளுக்கு அருளடையாளங்கள் வழியாகத் தமது வாழ்வைப் பகிர்ந்திடும் பொறுப்பை திருச்சபைக்கு கிறிஸ்து வழங்கியுள்ளார்.

*உலகின் ஒளி 1*: “கிறிஸ்துவுடனான தனது உறவுநிலையால், கடவுளுடனான நெருங்கிய ஒன்றிப்பு மற்றும் எல்லா மனிதருடனான ஒருமையில், திருச்சபை ஒருவித அருளடையாளமாக இருக்கிறாள், அதாவது, அவள் அத்தகைய ஒன்றிப்பு மற்றும் ஒருமையின் குறியீடாகவும் கருவியாகவும் இருக்கிறாள்.”

*உலகின் ஒளி 48*: “கிறிஸ்து தமது ஆவியாரின் வழியாக, தமது உடலாகியத் திருச்சபையை, உலகளாவிய மீட்பின் அருளடையாளமாக நிறுவுகிறார்.”

6. திருச்சபையின் வாழ்வில் கடவுளின் இயற்சார் நிகழ்மையின் குறியீடுகளாக ஏழு அருளடையாளங்கள் இருக்கின்றன. அவை இயேசு தமது மணவாட்டிக்காகச் செய்கின்ற மணவுறவுச் செயல்களாகக் கருதப்படலாம். ஒரு விதத்தில், மணவாளரான கிறிஸ்துவின் செயல்பாடுகளாக அருளடையாளங்கள் இருக்கின்றன என்று கூறலாம். தமது திருச்சபையின் வாழ்வில் கிறிஸ்து தம்மை நிகழ்மைப்படுத்துவதற்காக அவை இருக்கின்றன. தமது திருச்சபை வழியாக இயேசு இந்த அருளடையாளங்களை வழங்குவதன் முதன்மை நோக்கமாக நம்மைத் தூயோராக்குவதும், திருச்சபை தனது விசுவாச சாட்சியத்தில் வலிமையுறச் செய்வதுமாக இருக்கிறது.

*கதிம 1084*: “தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருந்து, தமது உடலாகியத் திருச்சபை மீது தூய ஆவியாரைப் பொழிந்த கிறிஸ்து, தமது அருளைப் பகிர்ந்திடத் தாம் நிறுவிய அருளடையாளங்கள் வழியாகத் தற்போது செயல்படுகிறார். இந்த அருளடையாளங்கள் நமது மனித இயல்பால் அணுகப்படக் கூடியப் புரிந்துணரும் குறியீடுகளாக (சொற்கள் மற்றும் செயல்கள்) இருக்கின்றன. கிறிஸ்துவின் செயல்கள் மற்றும் தூய ஆவியாரின் வல்லமையால் அவை அடையாளப்படுத்தும் அருளை பயனளிக்கும் வகையில் நிகழ்மைப்படுத்துகின்றன.”

*கதிம 1127*: “தகுந்த விசுவாசத்துடன் கொண்டாடப்படும் அருளடையாளங்கள் அவை குறித்துக்காட்டும் அருளை வழங்குகின்றன. அவை பயனளிக்கிறவையாக இருக்கின்றன, ஏனெனில் கிறிஸ்துவே அவற்றில் செயலாற்றுகிறார்: அவரே திருமுழுக்கு வழங்குகிறார், அவரே ஒவ்வொரு அருளடையாளமும் குறித்துக்காட்டும் அருள் தமது அருளடையாளங்களில் பகிரப்படச் செய்கிறார்.”

*கதிம 1131*: “கிறிஸ்துவால் நிறுவப்பட்டு, திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அருளடையாளங்கள் பயனளிக்கும் அருளடையாளங்களாக இருக்கின்றன, அவற்றால் இறை வாழ்வு நமக்கு வழங்கப்படுகிறது. கொண்டாடப்படும் அருளடையாளங்களின் காணப்படும் சடங்குகள், ஒவ்வோர் அருளடையாளமும் குறித்துக்காட்டும் சரியான அருளை நிகழ்மைப் படுத்துகின்றன.”

*கதிம 1134*: “அருளடையாள வாழ்வின் கனியானது தனிநபர் மற்றும் திருச்சபை சார்ந்ததாக இருக்கிறது. ஒரு புறம், விசுவாசிகளில் ஒவ்வொருவருக்கும் இந்த கனி கிறிஸ்து இயேசுவில் கடவுளுக்காக வாழ்வதாக இருக்கிறது; மற்றொரு புறம், திருச்சபைக்கு பிறரன்பிலும் தனது சாட்சிய எய்துபணியிலும் அதிகரிப்பதாக இருக்கிறது.”

7. திருப்பணி குருத்துவமானது மணவாளரான கிறிஸ்துவின் அருளடையாளமாக இருக்கிறது, குருத்துவத்தின் வழியாக, அருளடையாளங்கள் என அழைக்கப்படும் இந்த செயல்களைச் செய்து, அவற்றின் வழியாகத் தமது மணமகளைத் தூய்மைப்படுத்தி, தமது தூயநிலையில் அவளுக்குப் பங்களிக்கிறார்.

8. ஏழு அருளடையாளங்களை மூன்று குழுக்களாகப் (வகைகள்) பிரிக்கலாம்:

*புகுநிலை அருளடையாளங்கள்*

திருமுழுக்கு (திருச்சபைக்குள் (மணவாட்டிக்குள்) ஒருங்கிணைதல்)
உறுதிபூசுதல் (கிறிஸ்துவோடும் அவரது திருச்சபையோடும் மிக நெருக்கமானப்

பிணைப்பை அடைதல்)
நற்கருணை (இயேசு தமது உடலையும் குருதியையும் தமது மணவாட்டிக்கு உணவாக அளிக்கிறார்)

*நலமளிக்கும் அருளடையாளங்கள்*

ஒப்புரவு (இயேசு தமது மணவாட்டியை மன்னிக்கிறார்)
நோயில்பூசுதல் (இயேசு தமது மணவாட்டியை நலமாக்குகிறார்)

*பணியின் அருளடையாளங்கள்*

திருநிலைகள் (திருச்சபையில் இருந்து அழைக்கப்பட்ட ஆண்கள் கிறிஸ்து என்ற நபரில் செயல்படுதல்)
திருமணம் (திருச்சபையுடனான கிறிஸ்துவின் ஒன்றிப்பை கணவனும் மனைவியும் பிரதிபலித்தல்)

9. உள்ளார்ந்த அருளின் வெளியார்ந்த குறியீடுகளாக அருளடையாளங்கள் இருக்கின்றன. இயேசு குறிப்பிட்ட அடையாளங்கள் மற்றும் பொருள்களை காணப்படும் குறியீடுகளாகப் பயன்படுத்துகிறார். அவர் பயன்படுத்திய வெளியார்ந்த குறியீடுகளை மறைநூலில் காணலாம்: தண்ணீர் (மாற் 1:9-10), திராட்சை இரசம் யோவா 2:1-11), அப்பமும் மீனும் (மத் 6:41-44), தொடுதல் (மாற்1:41), உமிழ்தல் (மாற் 8:23), ஊதுதல் (யோவா 20:22), அப்பமும் திராட்சை இரசமும் (மாற் 14:22-23), எண்ணெய் (மாற் 6:13), கைகளை வைத்தல் (திப 6:6, 8:17).

10. எல்லா அருளடையாளங்களும் பொருளும் (பருப்பொருள் அல்லது அறிந்துணரக் கூடியது) வாய்பாடும் (சொற்கள் அல்லது செபங்கள்) கொண்டுள்ளன:

| அருளடையாளம் | பொருள் | வாய்பாடு |
|---|---|---|
| திருமுழுக்கு | தண்ணீர் | “தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் நான் உனக்குத் திருமுழுக்கு வழங்குகிறேன்.” |
| உறுதிபூசுதல் | எண்ணெய் | “தூய ஆவியாரின் கொடையால் முத்திரையிடப் பெறுவாயாக!” |
| நற்கருணை | அப்பமும் திராட்சை ரசமும் | “இது என் உடல்... இது என் குருதி...” |
| ஒப்புரவு | பாவம் | “தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் எல்லா பாவங்களில் இருந்தும் நான் உம்மை விடுவிக்கிறேன்.” |
| நோயில்பூசுதல் | எண்ணெய் | “இத்தூயப் பூசுதலினால், ஆண்டவர் தமது அன்பினாலும் இரக்கத்தினாலும் தூய ஆவியாரின் அருளால் உமக்கு உதவுவாராக ... பாவத்தில் இருந்து உம்மை மீட்ட ஆண்டவர், உம்மைக் காப்பாற்றி, எழும்பச் செய்வாராக!” |
| திருநிலைகள் | கைகள் வைத்தல், எண்ணெய் | திருநிலைப்பாட்டு செபம் |
| திருமணம் | வாக்குறுதிகளின் பரிமாற்றம் | “நான் ஏற்றுக்கொள்கிறேன்.” (இசைவு) |